Registered as a news paper. பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 29 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 13 (12.05.2006) வெள்ளிக்கிழமை இதழ் 224



விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்நேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு
10% விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993


## மேஜர் ஜெனரல் புறூவ் ஹெறாவ்டே புற்றுநோயால் மரணம்




கொழும்பு

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறூவ் ஹெறாவ்டே (வயது 67) நேற்று முன்தினம் நோர் வேயில் காலமானார்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் - 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி வரை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவராக பொறுப் பேற்ற இவர் - 2004ஆம் ஆண்டு பெப்ரவரியில் மீண்டும் கண் காணிப்புக் குழுவுக்கு தலைமையேற்றார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவர் இரங்கல்



கொழும்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலை வர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறூவ் ஹெறாவ்டே மறைவுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இரங் கல் தெரிவித்துள்ளார்.

ட்றொன்ட் புறூவ் ஹெறாவ்டே குடும்பத்தினருக்கு தேசியத் தலைவர் அனுப்பியுள்ள இரங்கல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது -

தமிழர் தாயகத்தில் அமைதியை உருவாக்குவதற்காக மிக வும் பிரச்சனைக்குரிய காலத்தில் பாரிய கடினமான பணியாக கண்காணிப்புக்குழுத் தலைவர் பொறுப்பிலிருந்து அவர் சிறப் பாக பணியாற்றினார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்து வதற்கான பங்களிப்பை கண்காணிப்புக்குழுத் தலைவர் பொறுப் பிலிருந்து மிகச் சிறப்பாக செயற்பட்டார். (08 ஆம் பக்கம் பார்க்க)

# டோறா மூழ்கடிப்பு!

கிளிநொச்சி


வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது வலிந்த தாக்குதலைத் தொடுத்த கடற்படையின் அதிவேக டோரா தாக்குதல் படகு ஒன்றைத் தாம் மூழ்கடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு நேற்றிரவு தகவல் வெளியிடுகையில் -

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் நேற்று மாலை 4 மணியளவில் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்புலிகளின் படகுகள் மீது கடற்படையின் அதிவேக தாக்குதல் படகுகள் வலிந்த தாக்குதலை மேற்கொண்டன.

இந்தத் தாக்குதலில் நான்கு கடற்புலிகள் வீரச்சாவடைந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

இதையடுத்து கடற்படைப் படகுகள் மீது கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் தாக்குதலைத் தொடுத்தன. (08 ஆம் பக்கம் பார்க்க)



## 17 கடற்படையினர் பலி!

## வன்னிப் பிரதேசத்தில் விமானக் குண்டுவீச்சு!

# 17 கடற்படையினர் பலி!

கொழும்பு —

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 710 துருப்புக் களை ஏற்றிக்கொண்டு சென்ற துருப்புக் காவிக் கப்பலுக்கு பாதுகாப்பளித்த கடற்படையின் டோறா அதிவேக தாக்குதல் படகு ஒன்று கடற்புலிகளால் மூழ்கடிக் கப்பட்டதாகவும் -

இதில் இருந்த 15 இற்கும் அதிக மான கடற்படையினர் காணாமற் போயிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

காங்கேசன்துறையில் இருந்து விடுமுறையில் வீடுகளுக்கு செல்லும் சுமார் 710 படையினரை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை 'பேர்ள் குறூஸ் 11' என்ற துருப்புக்காவிக் கப் பல் புறப்பட்டது.

இதற்கு வழக்கமாக நான்கு அதிவேக டோறா தாக்குதல் படகுகள் பாது காப்பு வழங்குகின்றபோதும் - நேற்று இரண்டு தாக்குதல் படகுகள் மட்டுமே பாதுகாப்பாகச் சென்று கொண்டிருந் தன.

அதிவேகத் தாக்குதல் படகு ஒன்றிலும், துருப்புக்காவியிலும் தலா ஒவ்வொரு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும் பயணம் செய்தனர்.

கடற்படையின் தொடரணி பருத்தித்துறை கரையிலிருந்து 30 கடல் மைல் தொலைவில் - வெற்றிலைக் கேணிப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது நேற்று மாலை 4 மணியளவில் தாக்குதலுக்குள்ளானது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பிரதேசத்தில் விமானக் குண்டுவீச்சு!

கிளிநொச்சி —

விமானப்படையின் இரண்டு கிபிர் ஜெட் போர் விமானங்கள் நேற்று மாலை வன்னிப் பிரசேத்தில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தின.

நேற்று மாலை 5.50 மணியளவில் வன்னி வான்பரப்புக்குள் பிரவேசித்த கிபிர் விமானங்கள் இரணைமடு மற்றும் சில பகுதிகளில் குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

பின்னர் மீண்டும் 6.25 மணியளவில் மீண்டும் வன்னி வான் பரப்புக்குள் பிரவேசித்த கிபிர் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

ஆயினும், இந்தக் குண்டுத் தாக்குதல்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

வன்னியில் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதை ஒப்புக்கொண்ட விமானப்படைப் பேச்சாளர் கப்டன் அஜந்த டி சில்வா, மேலதிக விபரங்களை வெளியிடவில்லை.

அதேவேளை, வான் தாக்குதல் நடத்தப்பட்டதா என்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாதென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கல்வியங்காட்டில் வயோதிபர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம் —

யாழ். கல்வியங்காடு பகுதியில் நேற்று வயோதிபர் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் கல்வியங்காடு - சட்டநாதர் சிவன் கோவிலுக்கு முன்பாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த முத்துவேலு காளிதாஸ் (வயது 75) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சட்டநாதர் சிவன்கோவிலுக்கு சென்றுகொண்டிருந்தவேளை ஆலயப் பகுதியில் நின்றிருந்த இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து இராணுவத்தினர் பிரஸ்தாப வயோதிபரை சுட்டுக் கொன்றதாக தெரியவருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த இவரது சடலம் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது.

இதேவேளை, படையினர் மீதான கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமுற்றதாக இராணுவத் தரப்பு உறுதி செய்தது.

# ஹென்றிக்சன் இன்று கிளிநொச்சி வருகிறார்

கிளிநொச்சி —

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் இன்று கிளிநொச்சிக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நேற்று திருகோணமலை மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடவே இவர் கிளிநொச்சி வரவுள்ளார்.

இன்று பிற்பகல் 4 மணிக்கு இவர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகிறது.

# கடலில் பயணம் செய்வதற்கு புலிகளுக்கு உரிமையில்லை

## என்கிறது கண்காணிப்புக்குழு

கொழும்பு —

விடுதலைப் புலிகள் வான் மற்றும் கடல் வழிகளைப் பயன்படுத்துவதற்கு எந்தவித உரிமைகளும் வழங்கப்படவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

படையினரை ஆத்திரமூட்டும் வகையில் கடலில் விடுதலைப் புலிகள் நடமாடுவது பாரிய போர்நிறுத்த மீறலாகும்.

நேற்று கடற்படையினரின் ஒரு படகை மூழ்கடித்துள்ளனர். படகில் இருந்த கண்காணிப்புக் குழுவினருக்கும் பாரிய ஆபத்து ஏற்பட்டது. இலங்கையைச் சுற்றிய கடற்பிரதேசமானது அரசாங்கத்தின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# சுத்திகரிப்பு தொழிலாளர்களாக நிரந்தர நியமனம் பெறுவோர்

யாழ்ப்பாணம்

சுகாதார தொண்டர்களிலிருந்து பின்வருவோர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக நியமனம் செய்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே நிரந்தர நியமனம் பெற்றோர் தவறாது சமூகமளித்து நியமனக் கடிதத்தை பெற்றுக் கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

திருமதி.கஜெந்திரன் ராஜகுமாரி (சுன்னாகம்), திருமதி.அகிலேஸ்வரி ஜெயந்திதேவி (சுன்னாகம்), திருமதி. சபாபதிதாசன் விமலறஜனி (நெடுந்தீவு), கந்தையா ஜெயராணி (கொடிகாமம்), திருமதி.ஆனந்தராசா தேவலோகராணி (கொடிகாமம்), திருமதி. சக்திவேல் உதயராணி (பருத்தித்துறை),

ஆறுமுகம் ஜீவனாந்தி (சுழிபுரம்), திருமதி.ஜெயசுதன் ஜலிமேரி (நெடுந்தீவு), குமாரசாமி செல்வனந்தி (நெடுந்தீவு), திருமதி.சுதந்தா பிறேம்லால் சசிறஞ்சினி (அளவெட்டி), சின்னராசா மாலினி (உரும்பிராய்), குகதாசன் மஞ்சுளா (கரவெட்டி). திருமதி. சிவச்செல்வம் பிறேமினி (பருத்தித்துறை), செல்வன் தனேஸ்வரி (பண்டத்தரிப்பு), மதியாபரணம் ஜெகவதனி (நெடுந்தீவு), திருமதி.ஜெகரூபன் பவானந்தி (தாளையடி),

திருமதி. மகேந்திரராஜா செல்வகுமாரி (தாளையடி), திருமதி.பிரபாகரன் பாமினி (பருத்தித்துறை), நிக்கிராஸ் மனிஸ்டலா (குடத்தனை), கதிரவேற்பிள்ளை சந்திரகாந்தி (கரவெட்டி), சிங்கநாயகம் அன்பிலஸ் சுகந்தி (பண்டத்தரிப்பு), திருமதி. சுந்தரபாலன் மதிவேணி (தெல்லிப்பளை), அப்பையா மதிரஜனி (மிருசுவில்), திருமதி.அகிலன் நளாயினி (அனலைதீவு), திருமதி. சுப்பிரமணியம் புஸ்ப ராணி (வேலணை)

திருமதி.ஆலசுந்தரம் சுமதி (கரவெட்டி),குருநாதபிள்ளை நிரஞ்சினி (ஆனைக்கோட்டை), சங்கரப்பிள்ளை சசிகலா (தெல்லிப்பளை), இராஜகுமார சுபேஜினி (மல்லாகம்), வல்லிபுரம் உதயராணி (கொடிகாமம்),திருமதி.பிரபாகரன் மதிவதனி (கோப்பாய் வடக்கு), பெரியான் விமலராணி (புத்தூர்),கோபாலகிருஸ்ணன் விஜிதா(உடுவில்), நல்லையா உதயரஞ்சிதா (மயிலங்காடு), தருமரட்ணம் செல்வநாயகி(எழுவைதீவு),

திருமதி.தனபாலசுந்தரம் ஜெயவதனி (அனலைதீவு),இராசையா கோமதி (பன்னாலை), திருமதி. கதிர்காமநாதன் துசியந்தினி (கரவெட்டி), கந்தசாமி கமலாஜினி(கரவெட்டி), கந்தையா ரேவதி (தாளையடி), நாகமுத்து சிவந்தினி (கொக்குவில்), கந்தசாமி ஜெயசுதர்சினி( தெல்லிப்பளை), திருமதி ராஜரட்ணம் ரஞ்சினி (புத்தூர்), திருமதி இராதாகிருஸ்ணன் பிறேமலி (கல்லூரடி),பொன்னன் புஸ்பவதி (கைதடி),கந்தையா சரஸ்வதி (சாவகச்சேரி),நவரட்ணராஜன் பராசக்தி (சாவகச்சேரி), திருமதி. விஜயகுமார் சசிகலா (சாவகச்சேரி), திருமதி மரியதாஸ் டயானா (மாதகல்),வினாசி மங்கலேஸ்வரி (தெல்லிப்பளை),

கிருஸ்ணசாமி சுகஸ்தி (யாழ்ப்பாணம்), தவராஜா வலன்டினா (சங்கானை), கணபதிப்பிள்ளை சிவாஜினி (சண்டிலிப்பாய்),சிறிதரன் கஜேந்தினி (சுன்னாகம்), எம்.நவராஜ் (கொழும்பகம்), செல்லத்துரை தருமபாமா (வரணி), திருமதி பிரகாசம் நித்தியதிரேசா (நெடுந்தீவு), மஸ்கலஸ் தோமஸ் மரியகொலஸ்ரிக்கா (நெடுந்தீவு), நல்லான் யோகராணி (கரவெட்டி), தாமோதரம்பிள்ளை யசிந்தா (கரவெட்டி), தருகாசலம் செல்வராணி (கரவெட்டி), பாலச்சந்திரன் சிறிமதி (சங்கரத்தை), திருமதி.ஜி.சரோஜினி (பண்டத்தரிப்பு), திருமதி.இராஜேந்திரன் புஸ்பராணி (கொடிகாமம்), குணதாசன் ஜெயகௌரி (கைதடி), ஆறுமுகம் ஜெசிகா (மிருசுவில்), திருமதி. அரியரட்ணம் ரஞ்ஜினி (வேலணை), அகஸ்ரின் மேரிறொசிற்றா (நெடுந்தீவு), திருமதி.கந்தசாமி ராஜினிதேவி (நீர்வேலி),

நாகமுத்து ஜெயந்தகுமாரி (கரவெட்டி), சிவபாதசுந்தரம் ஜெயரூபன்(தாளையடி), திருமதி.ரி.குணசேகரம் (கோப்பாய்), ஆர்.மகேஸ்வரானந்தன் (புத்தூர்), ஆர்.கிருபாகரன் (உடுப்பிட்டி), ஆ.கோவந்தினி (தெல்லிப்பளை), உதயகுமார் ரஞ்சினி தேவி (மீசாலை), அருண்நாதன் மாலினி (வரணி), சரவணமுத்து ரூபரஞ்சினி (சாவகச்சேரி), செல்லத்துரை கவிதாஞ்சலி (வரணி), திருமதி. மோகனரூபன் உமாவதி (உடுப்பிட்டி), வீரசிங்கம் வசந்தகுமாரி (நாகர்கோவில்), விக்னேஸ்வரன் வினுஷா (வல்வெட்டித்துறை), மார்க்கண்டு சுபரஞ்சினி (இளவாலை), செல்லத்துரை செல்வராணி (சுன்னாகம்), சின்னக்குட்டி சுகந்தினி (புன்னாலைக்கட்டுவன்),

அண்ணாமலை கலைச்செல்வி (தெல்லிப்பளை), கே.தயானந்தினி (கொக்குவில்), நவரட்ணம் ரஞ்சிதமலர் (மீசாலை), கந்தையா யமுனாதேவி (நெடுந்தீவு), திருமதி.ரிச்சாட் பேக்மன் மேரி யுலேற்றா (நெடுந்தீவு), துரைராசா வசந்தினி (கோப்பாய்), திருமதி.தீபகு மார் லோஜினி (கரவெட்டி), திருமதி. வேல் முருகன் முனீஸ்வரி (மானிப்பாய்) செல்வராசா பிரேமிலா (தெல்லிப்பளை),

தனபால சிங்கம் கனகமணி (கொடிகாமம்), மாசிலாமணி கிறிஸ்ரா (ஊர்காவற்றுறை), தில்லையம்பலம் சுகந்தி (நயினாதீவு), பத்மநாதன் சுதாகரன் (நயினாதீவு), திருமதி.புலேந்திரன் ஜீவிதா (நீர்வேலி), சண்முகராஜா சுகந்தினி (சுன்னாகம்), நாகராசா சுஜாத்தா (தாளையடி)

## திருத்தல திருவிழா

யாழ்ப்பாணம்

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னையின் திருத்தல திருவிழா நாளை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது.

பற்றிமா அன்னையின் திருத்தல திருவிழாவின் வழிபாடுகள் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும், பிற்பகல் 4.30மணிக்கு திருச்செப மாலையுடன் இடம்பெற்று வருகிறது.

வழிபாடுகளுக்கான திருப்பலி மறையுரைகளை அருட்தந்தை வின்சன் ஆற்றிவருகிறார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : வி.கனிஸ்மன்
முகவரி : குருநகர்.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ------------------------

முகவரி : ------------------------

பிறந்த ஆண்டு : ------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

## பெற்றோல் விநியோக நேரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி

சாவகச்சேரி பெற்றோல் நிலையத்தில் காலை 7 மணி தொடக்கம் 2 மணித்தியாலங்கள் வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகம் செய்யப்படுவதால் ஏனைய நேரங்களில் போக்குவரத்துச் செய்யும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் மின்சாரம் இரவில் சில மணித்தியாலங்கள் தடைப்படுத்தப்படுவதால் மண்ணெண்ணெய் மக்களுக்கு தேவைப்படுகிறது. மண்ணெண்ணெயும் சில நாட்களாக அங்கு விநியோகிக்கப்படவில்லை. அதனால் விவசாயிகளும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றார்கள்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் தெரிவித்துள்ளனர். (29)

## உயர்தரப் பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

வலிகாமம்

வலிகாமம் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தையும், கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தையும் கொண்ட யாழ்ப்பணம் வலயம் II இற்கு உட்பட்ட பிரதேசத்தில் கல்விப் பொதுத் தரா தர உயர்தரப் பரீட்சையில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ள பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் - எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் அனைவரையும் தவறாது சமூகம் அளிக்கு மாறு வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

## பொதுச்சந்தை இல்லாமல் மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்

மண்டைதீவுப் பகுதியில் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பொதுச்சந்தை ஒன்று இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுச்சந்தை இன்மையால் மரக்கறி மற்றும் மீன்வகைகளை தூர இடங்களுக்குச் சென்றே மக்கள் பெற்று வருகின்றனர். அத்துடன் வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களை யாழ்.நகருக்கு வந்தே பெற்றுச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனால் போக்குவரத்துக்கு அதிக பணம் செலவிடப்படுவதுடன் நேரமும் வீண்விரயமாகி, தமது அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் பொதுச் சந்தையொன்றை சிறியளவிலாவது அமைத்து தரவேண்டுமெனவும் மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் இயங்கி வந்த வேலணை ப.நோ.கூ. சங்க இரண்டு கிளைகளில் ஒன்று மட்டுமே தற்போது இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## அம்புலன்ஸ் சேவை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்

இரவு நேரத்தில் அம்புலன்ஸ் சேவை நடத்துவது தொடர்பாக அம்புலன்ஸ் வைத்திருக்கும் நிறுவனங்களின் தலைவர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இரவு நேரம், ஊரடங்கு நேரம் ஆகிய காலகட்டத்தில் அம்புலன்ஸ் சேவையை நடாத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதுடன் அதற்கான உத்தரவை பெறுவதற்கான வழிவகை குறித்தும் ஆராயப்படவுள்ளது.

## பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டம்

கோப்பாய்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு சங்கத் தலைவர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் புதிதாக சங்கத்தில் இணையவிரும்பும் மாணவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலாமெனவும் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை வெசாக் போயா ஆன்மீக நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

யாழ்.நிலையத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அதிகாலை 4.30 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவடையவுள்ளது.

## சங்காபிஷேகம்

மல்லாகம்

மல்லாகம் பதி கொத்தறாவத்தை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை 109 சங்காபிஷேகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

## பௌர்ணமி தினமும் திருவிளக்கு பூஜையும்

யாழ்ப்பாணம்

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தால் இன்று சித்திரா பௌர்ணமி விழாவும் திருவிளக்கு பூஜையும் இடம்பெறவுள்ளது.

சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க.பாடசாலை பழைய கட்டடத்தில் இன்றுகாலை 9 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. திருவிளக்குப் பூஜையில் சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் கலந்து கொள்ளலாம்.

## இராணுவத்தினரால் விபரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம்

முச்சக்கரவண்டிகள் வர்த்தக நிலைங்களின் விபரங்கள் கடந்த சில நாட்களாக இராணுவத்தினரால் திரட்டப்பட்டு வருகிறது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதியில் இயங்கி வருகின்ற வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களின் விபரங்கள், வேலையாட்களின் விபரங்கள் மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், ஓட்டுநர்களின் பெயர், சொந்த முகவரி, தற்காலிக முகவரி, அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்களை இராணுவத்தினர் பதிவுசெய்து வருகின்றனர்.

## தேசிய பொறியியல் விஞ்ஞான கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி

தேசிய பொறியியல் விஞ்ஞான கற்கை நெறிகளுக்குப் புதிய கல்வியாண்டுக்கான பயிலுனர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை கட்டுநாயக்கா எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனம் கோரியுள்ளது.

நான்கு வருடகால உள்ளகப் பயிற்சிகளைக் கொண்ட இந்தப் பாடநெறியில் குடிசார் இயந்திரவியல் இலத்திரனியல், எந்திரவியல், மின்வலு இயந்திரவியல் உட்பட 9 வகையான பாடநெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஆங்கிலமொழிமூலமான போதனா மொழியைக் கொண்ட இந்தப் பாடநெறிக்கு க.பொ.த உயர்தர பரீட்சையில் கணிதப்பிரிவில் சித்தியடைந்த 18 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை பணிப்பாளர் எந்திரவியல் தொழில் நுட்பவியல் பயிற்சி நிறுவனம் கட்டுநாயக்க எனும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இதற்குரிய விண்ணப்பங்களை இல. 07, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (29)

## உத்தியோகத்தர் நியமனம்

நெடுந்தீவு

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான சமுகசேவை உத்தியோகத்தராக வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் பணியாற்றிய வி.செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவர் கடந்த மாதம் இறுதிப்பகுதியில் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய அலுவலர் சு.வரதபாஸ்கரன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் இன்று காலை 7.00 மணியளவில் வண்.கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆலயபூசையைத் தொடர்ந்து ஆலய அறங்காவலர்களின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.



பொலிஸ் சேவைக்குப் புதிதாக 4 ஆயிரம் பேரை சேர்க்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கொழும்பில் இதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

# சிறைச்சாலை அதிகாரிகள் பலர் ஊழல் மிக்கவர்களாக உள்ளனர்

## நீதித்துறை அமைச்சு செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு —

சிறைச்சாலை அதிகாரிகள் ஊழல் மிக்கவர்களாக இருப்பதாக நீதித் துறை அமைச்சின் செயலாளர் சுகத் கம்லத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளராக மேஜர் ஜெனரல் விஜித விஜே குணவர்த்தன பொறுப்பேற்ற நிகழ்வில் பங்கேற்றுப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகளில் குற்றவாளிகளைப் பார்ப்பதற்கு வருகை தரும் பார்வையாளர்களிடம் சிறைச்சாலை அதிகாரிகள் லஞ்சம் பெறுகின்றனர்.

இது தொடர்பாக நாம் முழுமையாக அவதானமாகவே இருக்கிறோம் என்பதை அந்த ஊழல் அதிகாரிகளுக்கு எச்சரிக்கின்றோம்.

இத்தகைய அதிகாரிகளால் ஒட்டு மொத்த சிறைச்சாலைத் துறையினரது மதிப்பும் சீர்குலைக்கப்படுகிறது.

அதேபோல் வர்த்தகர்கள் மற்றும் வெளிநாட்டு சிறைக்கைதிகளுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுவது குறித்தும் அரசாங்கம் அறிந்துள்ளது. அதிகாரிகள் இப்படிச் செயற்படுவதற்கு சிறைச்சாலைகள் ஒன்றும் தனியார் உரிமம் பெற்றவை அல்ல. அரசாங்கத்தின் சொத்து எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மேஜர் ஜெனரல் விஜேகுணவர்த்தன பேசும்போது -

சிறைச்சாலைகளைப் படையினர் போன்று ஒழுக்கம் நிறைந்த துறையாக மாற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்படும். ஒழுங்கீன நடவடிக்கைகள் அகற்றப்படும்.

அரசியல்வாதிகள் பலரும் சிறைச்சாலை ஆணையாளரைத் தவறுக்கு துணைபோக வற்புறுத்துகின்றனர். ஆனால், நான் ஒரு இராணுவ அதிகாரி. இராணுவம் ஒரு ஒழுங்கமைந்த பிரிவு.

சிறைச்சாலை என்பதும் கூட ஒரு சிறிய இராணுவம் போன்றதே. இராணுவத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை எனது தலைமையின் கீழ் சில மாதங்களுக்கு முன்னராக இயக்கி வந்தேன். இராணுவத்தினரது தரத்துக்கு சிறைச்சாலைகளையும் விரைவில் உருவாக்குவேன் எனத் தெரிவித்தார்.

# சுதந்திரக் கட்சி அரசியல் யாப்பை திருத்தம் செய்வதற்கு தீர்மானம்

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் யாப்பில் திருத்தம் செய்ய அந்தக் கட்சி முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டில் உள்ள கட்சியின் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்க வகை செய்ய அரசியல் யாப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும், அதில் அவரது ஒப்புதலைக் கோரியுள்ளதாகவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மகிந்த ராஜபக்ஷவை கட்சித் தலைவராக்க மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தி வருவதையடுத்து இந்தத் திருத்தத்தை மேற் கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சந்திரிகாவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சந்திரிகா – வெளிநாடு செல்லும் போது பதில் தலைவராக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவை நியமித்திருந்தார். ஆனால், கட்சியின் அரசியல் யாப்பின்படி அத்தகைய நியமனங்களை சந்திரிகா மேற்கொள்ள முடியாது என்பதால் பதில் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை மத்திய குழு நியமித்தது.

இந்த நிலையில் கட்சித் தலைவராகவும் மகிந்தவை நியமிக்கும் முயற்சியாக சந்திரிகாவுக்கு இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

# உயர்பாதுகாப்பு வலய குடியேற்றம் நீதிமன்றத் தீர்ப்புக்கு வரவேற்பு

கொழும்பு —

படையினரது உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன் வரவேற்றுள்ளார்.

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு என்றும், இருதரப்பு நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்கான ஒரு தொடக்கம் என்றும் அவர் கூறினார்.

வெசாக் பண்டிகையின்போது உயர் நீதிமன்றினால் ஒருசிறிய விளக்கு ஒன்று ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்றும், சரியான நேரத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இது என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளுக்கு இராணுவப் பயிற்சி நோர்வே வழங்குகிறதாம்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நோர்வே - இராணுவப் பயிற்சி அளிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி கண்டனம் செய்யவில்லை. இலங்கைக்கு ஐ.நா.அமைதிப்படை கொண்டு வரப்படும் என்று மட்டும் தான் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் பேச்சுக்களுக்குத் தயாராக இருக்கின்றபோதும் அகாஷியை உள்ளடக்கிய இணைத் தலைமை நாடுகள், பேச்சு மேசைக்குத் திரும்புவதற்காக விடுதலைப் புலிகள் மீது அழுத்தம் கொடுக்கப் போவதில்லை. பயங்கரவாதத்தைத் தடுக்கவும் பயங்கரவாதம் தொடர்பாகவும் அரசாங்கம் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை விளக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலுமுள்ள குடும்பங்களின் விபரம் திரட்டல்

கொழும்பு —

தற்போது தோன்றியுள்ள பாதுகாப்பற்ற நிலைமையை கவனத்திலெடுத்து ஒவ்வொரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்குள்ளும் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அவர்களது இனத்தன்மை தொழில் தற்காலிகமாக வசிப்பவர்களா என்ற விபரங்களைப் பதிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திரட்டப்படும் இந்தத் தகவல்கள் பொலிஸ் நிலையங்களில் வைக்கப்படும்.

இதன்மூலம் ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் புதிதாக வந்துள்ளவர்கள் தற்காலிகமாக வசிப்பவர்கள் போன்ற விபரங்களைக் கண்டறிய முடியுமென பொலிஸ் தலைமையகம் நம்புகிறது.

இந்தச் செயற்பாடு மேல் மாகாணத்திலேயே கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளன.

இந்த நடவடிக்கை கடந்த எட்டாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் நிறைவடையவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# அமைச்சர்கள், உயரதிகாரிகளுக்கு குண்டு துளைக்காத வாகனங்கள்

கொழும்பு —

அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்குக் குண்டு துளைக்காத வாகனங்களை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தாக்குதலையடுத்து இந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தலா 120 மில்லியன் ரூபா மதிப்புக் கொண்ட மெர்சிடெஸ் பென்ஸ் வாகனங்களை ஜேர்மனியிலிருந்து பெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இந்த வாகனங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனிய சரக்கு விமானம் மூலம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வட - கிழக்கு வன்முறைகளுக்கு விடுதலைப்புலிகளே பொறுப்பாம்

## ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு —

வடக்கு - கிழக்கு பிரதேச வன்முறைகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று அமைச்சர் கெகலிய ரம்புக்வெல குற்றம்சாட்டியுள்ளார்.

அமைதிப் பேச்சுக்களுக்காக வடக்கு - கிழக்கில் வன்முறைகளற்ற ஏதுவான சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இதற்கு மறுப்புத் தெரிவித்து கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கூறியதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக்குப் பின்னர், புலிகள் தெரிவித்த கருத்துகள் குறித்து அரசாங்கத்துக்கு ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் வன்முறைகளை உருவாக்குகின்றனர்.

நாட்டின் பிரதேச ஒற்றுமையைப் பாதுகாக்க அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. நாம் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. அதிகரிக்கும் வன்முறைகளால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கான அரசாங்கத்தின் கதவுகள் எந்த நேரமும் திறந்தேயுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்காக இணைத்தலைமை நாடுகளும், நோர்வே அனுசரணையாளர்களும் மேலதிக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

# ஐ.நா.மனித உரிமைக்குழுவில் இலங்கைக்கு இடம் கிடைத்தது

கொழும்பு —

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடும் எதிர்ப்புக்களுக்கு இடையே இலங்கை இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்த லில் இலங்கை உறுப்பு நாடாகத் தகுதி பெற்றது.

இந்தக் குழுவில் கடந்த முறை மொத்தம் 60 நாடுகள் இடம் பெற்றிருந்தன. தற்போது ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 47 நாடுகளைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் மையம் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்கள் இலங்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இலங்கையின் நீதித்துறை பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு அனைத்துமே ஊழல் மிக்கதாகவும், செயலற்றதாகவும் உள்ள நிலையில் ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவில் இலங்கையை இடம் பெறச் செய்யக்கூடாது எனவும் அந்த அமைப்பினர் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானமுயற்சிகள் தொடர்ந்தாலே அரசாங்கத்துடன் இணைவோம்

## என்கிறார் ஹக்கீம்

கொழும்பு —

அமைதி முயற்சிகள் தொடர்ந்தால்தான் அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணையும் என்று அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூஷி அகாஷியை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் ஹக்கீம் கூறியதாவது -

அமைதிப் பேச்சுக்கள் நடத்தும்போதே பிரதான எதிர்க்கட்சி மற்றும் கடும்போக்குக் கட்சிகளுடன் இணைந்து அரசாங்கம் இணக்கப்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும்.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நகர்வுகளை மேற்கொள்வார் என்று நம்புகிறோம்.

எதிர்வரும் வாரங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன், அரசாங்கமும் பேச்சுக்கள் நடத்தும் என்று அகாஷி எம்மிடம் நம்பிக்கை தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்தும் போரைத் தவிர்க்க வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அகாஷியிடம் வலியுறுத்தப்பட்டது.

முஸ்லிம்கள் முகம் கொடுத்த பல்வேறு கடந்த கால சம்பவங்களை நாம் விளக்கினோம். இலங்கையில் யுத்தம் மீண்டும் உருவானால், அது மக்களின் பாதுகாப்புக்கும், பொருளாதாரத்துக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இரு இனங்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புகின்ற நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அகாஷியிடம் நாம் வலியுறுத்தினோம் எனத் தெரிவித்தார்.

# ஜெனிவா பேச்சுக்களுடன் அரசாங்கம் 4 ஆம் கட்ட போரை ஆரம்பித்துவிட்டது

## வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன்

கிளிநொச்சிள

ஜெனீவாப் பேச்சுக்களுடன் நான்காம் கட்ட ஈழப் போர் அரசால் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி லெப் கேணல் வேலவன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்குஅவர் மேலும் தெரிவிக்கையில் -

நான்காம் கட்ட ஈழப்போர் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இறுதியாக நடைபெற்ற பேச்சுக்களுடன் அது அரசால் வெளிப்படையாகவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அதனை உணர்ந்து கொள்ளாது சமாதானம் பற்றிய மாயையில் தமிழ் மக்கள் எவரும் வாழமுடியாது. அவ்வாறு எம்மை வைத்திருப்பதற்கு உலகில் எவரும் முயற்சிக்கவும் கூடாது.

நாம் எமது கடந்த கால அனுபவங்களைக் கொண்டு பெருஞ்சமர் ஒன்று, போர் ஒன்று ஆரம்பித்து விட்டது என்ற செய்தியைக் கொண்டு வரும் என்று காத்திருக்கிறோம். ஆனால், தற்போதைய கள யதார்த்தம் அவ்வாறு இல்லை. ஒரு யுத்தம் எப்போதும் பெருஞ்சமர்களுடன் தான் ஆரம்பிக்கும் என்று எந்த விதிகளும் இல்லை.

கடைசியாக நடைபெற்ற ஜெனிவாப் பேச்சுக்களின் பின் அரசு வெளிப்படையாகவே எம் மீது தாக்குதல்களை நடத்தத் தொடங்கிவிட்டது. ஆரம்பத்தில் துணை ஆயுதக் குழுக்களின் மறைப்பில் இருந்த அரசு இப்போது வெளிப்படையாகவே இயங்கத் தொடங்கிவிட்டது. எனவே, போர் நிறுத்தம் இப்போதும் சரியாக அமுலில் இருக்கிறது என்று கூறிவிட முடியாது.

போர் நிறுத்தம் என்பது ஈழப் போர் முடியும் வரை அப்படியே தான் இருக்கப் போகிறது.

ஆனால் அது இருக்கும் போதே தாக்குதல்கள் நடக்கும், சண்டைகள் நடக்கும், சமர்களும் நடக்கும். இது தான் நான்காம் கட்ட ஈழப்போர் ஆகும்.

திருமலையில் சிங்களப் படைகள் எம் மீது வெளிப்படையாகவே தாக்கின. அதனை மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை என அரசு உரிமை கோரியது. அதனை ஏற்றுக்கொண்ட அல்லது சகித்துக் கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையால் ஒரு பெரும் சமரைத் தொடக்கி ஏதாவது ஒரு தரப்பின் கைகளிலுள்ள பகுதியைக் கைப்பற்றி, கட்டுப்பாட்டுக்கள் வைத்திருப்பதை சகித்துக் கொள்ளமுடியாது என்று தெளிவாகக் கூறமுடியாது.

எமது மக்கள் இன்று எல்லா இடங்களிலும் மோசமாகப் படுகொலை செய்யப்படுகிறார்கள். இதனை நாம் வெறுமனே பார்த்திருந்தால், இந்த நிலை பேரழிவு நோக்கிச் செல்லும். எதற்கும் நாம் முதலில் எம்மிடமுள்ள தவறுகளுக்கான காரணங்களைத் தேடுவோம்.

இன்று நாம் சந்திக்கும் அழிவுகளுக்கும் ஒருவகையில் நாம் எல்லோரும் தான் காரணம். ஏனெனில் இந்த இறுதி யுத்தத்தில் உணர்ச்சிகளுக்கு இடமில்லை. முழுத்தயார் நிலையில் தான் இந்த இறுதி யுத்தத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும். எமது அவலத்துக்குத் தீர்வு காண எமக்கு எவரது உதவியும் தேவையில்லை. நாமே நமது மீட்பர்கள் எனத் தெரிவித்தார்.

## மேஜர் நீதன் நினைவு தூபி திறந்து வைப்பு

வட்டக்கச்சி

மேஜர் நீதனின் நினைவுத்தூபி ஒட்டு சுட்டான் நீர்ப்பாசன வளாகச் சந்தியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போராளி வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை ஒட்டுசுட்டான் பனை - தென்னை வள கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஏற்றினார். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் நாடாவை வெட்டித் தூபியை திறந்து வைத்தார்.

கருத்துரைகளை போராளி இறைவேந்தன், சதாசிவம் கனகரத்தினம் உட்பட பலர் வழங்கினர். (09)

## சுகாதாரத்துக்கு கேடாக இயங்கிய அரிசி ஆலைகள் செயற்படத்தடை

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவைகளின் விசேட நடவடிக்கைப் பிரிவின, விசேட நடவடிக்கைச் செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட உருத்திரபுரம், கூழாவடி, சிவநகர் உட்பட்ட பகுதிகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மீது உணவு ஆய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, அங்குள்ள குறைபாடுகள் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டன.

அத்துடன், சுகாதாரத்துக்கு கேடான வகையில் இயங்கி வந்த இரண்டு அரிசி ஆலைகளின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், நோய்க்காவிகள் உற்பத்தியாகும் இடங்களும், பூச்சியியல் ஆய்வுச் செயற்பாட்டின் மூலம் இனம் காணப்பட்டு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

எனவே, அனைத்து உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களும் தங்கள் நிலையங்களுக்கு முன்னர் அறிவுறுத்தப்பட்ட உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதுடன், நோய்க் காவிகள் பெருகும் இடங்களை இல்லது ஒழிப்பதற்கு ஒத்துழைக்குமாறும் தமிழீழ சுகாதார சேவை கேட்டுக் கொண்டுள்ளது.


## உணவு பதனிடல், பாதுகாத்தல் செய்முறை பயிற்சி வகுப்பு

வட்டக்கச்சி

பூநகரிப் பிரதேச வலைப்பாடுக் கிராமத்தில் செயற்பட்டுவரும் ஊக்குவிப்புக்குழு உறுப்பினர்களுக்கான உணவு பதனிடலும், பாதுகாத்தலும் குறித்த செய்முறைப் பயிற்சி வகுப்பு கடந்த சனிக்கிழமை வலைப்பாடு பங்குப் பணிமனையில் இடம் பெற்றது.

இதற்கான ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் கிளிநொச்சி வலய ஆசிரிய ஆலோசகர் பாலச்சந்திரன் வழங்கினார். இந்தப் பயிற்சி வகுப்பில் 50 உறுப்பினர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர். கியூடெக்-கரித்தாஸ் வன்னி நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்தச் செய்முறைப் பயிற்சி வகுப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (09)

## எள்ளுக்காடு கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு



கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் வடக்கு- கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்துக்கமைவான வேலைத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள எள்ளுக்காடு கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பொதுநோக்கு மண்டபத்துக்கான பெயர்ப் பலகையை தமிழர் புனர்வாழ்வுக் கழக வடக்கு - கிழக்கு சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர் சுடர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பொதுநோக்கு மண்டபத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் சீசர், சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் ஜெயராஜ், நூலக கட்டடத்தை வை. வைத்தீஸ்வரமூர்த்தி, கிராம சேவையாளர் அலுவலக வளாகத்தை எள்ளுக்காடு கிராம சேவையாளர் மரியநாயகம் ஆகியோர் திறந்துவைத்தனர்.

## பற்சுகாதார பிரிவால் பெருமளவு மக்கள் பயன்

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவினர் மருத்துவ வசதி குறைந்த மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று, அந்தப் பகுதி மக்களின் பற்சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்பிடுங்குதல், பல் அடைத்தல், பல் சுத்தம் செய்தல் போன்ற சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதுடன், பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களையும் வழங்கி வருகின்றனர். இந்த செயற்பாடுகள் மூலம் மக்களிடையே காணப்பட்ட பெருமளவான பற்சுகாதாரக் குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்களிடையே பற்சுகாதாரம் முன்னேற்றமடைந்து வருகின்றது. கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட பற்சிகிச்சைகளில் ஆயிரத்து 214 பேர் பயனடைந்துள்ளனரென தமிழீழ சுகாதார சேவைகள் தெரிவித்துள்ளது.

## அனுமதிப் பத்திரமின்றி கடல் அட்டைகளை வைத்திருந்தவருக்கு அபராதம் விதிப்பு

மன்னார்

சிலாவத்துறையில் இருந்து மன்னார் நகருக்கு அனுமதிப் பத்திரமின்றி கடல் அட்டைகள் மற்றும் கடற்சங்குகள் எடுத்துவந்த ஒருவருக்கு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

முருங்கன் பொலிஸார் மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் நேற்று முன்தினம் காலை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, குறித்த நபரை கைது செய்தனர்.

இதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரிடம் குறித்த கடல் அட்டைகளையும், சங்குகளையும் தான் சிலாவத்துறை கடற்பகுதியில் இருந்து மன்னார் நகருக்கு எடுத்து வந்ததாக அவர் தெரிவித்தார்.

பின்னர் முருங்கன் பொலிஸார் சந்தேக நபரை நேற்று முன்தினம் பிற்பகல் மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா முன்னிலையில் ஆஜர் செய்த போது - நீதிவான் அபராதமாக இரண்டாயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் கடல் அட்டைகளையும், சங்குகளையும் கைதான நபரிடமே மீண்டும் ஒப்படைக்குமாறு முருங்கன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (மோ)

## மதியொளி திட்ட நிகழ்வு

கிளிநொச்சி

கிளிநொச்சி பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் மதியொளி திட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் க. செல்வநாயகம் கலந்து கொண்டு நிதியை மாணவர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வுக்கான நிதியை புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் குகன், சிவனந்தன், அகிலன், மயில்வாகனம், வின்சன், சின்னத்துரை ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதியொளி திட்டமானது - தமிழர் தாயகப் பகுதிகளில், தமது கற்றல் தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமப்படும் மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக மேற்கொள்ளப்படும் திட்டமாகும்.

இந்தத் திட்டம் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் இரண்டு வருடங்களுக்கு மேலாக தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள நான்கு பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறையிலுள்ளது. இந்தத் திட்டத்துக்கூடாகப் பயனாளி ஒருவருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் கல்வியை நிறைவு செய்யும் வரை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அரச அதிபர் வாசஸ்தல அடிக்கல் நாட்டு நிகழ்வு

மன்னார்

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கான புதிய உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் இன்று காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளதாக நிகொட் திட்டத்துக்கான பிரதிப் பணிப்பாளர் கே. ராஜரட்ணம் தெரிவித்தார்.

நிகொட் IIஆம் கட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட சுமார் 16 மில்லியன் ரூபா நிதியில் இரண்டு மாடி கொண்ட சகல வசதிகளுடன் கூடிய நவீன கட்டடமாக அரச அதிபருக்கான வாசஸ்தலம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, நிகொட் திட்டத்தின் IIஆம் கட்டத்தின் கீழ் மன்னார் நகரில் வானிலை அவதான நிலையத்துக்கான இரண்டு மாடிக் கட்டடங்கள் இரண்டும், ஊழியர்களுக்கான இரண்டு விடுதிகளும் அமைக்கப்பட்டு வருவதுடன், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலகர்களுக்கான இரண்டு விடுதிகளின் நிர்மாணப் பணிகளும் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (மோ)

## பாடசாலை சென்ற மாணவர்களை காணவில்லையென முறைப்பாடு

மன்னார்

மன்னாரில் பாடசாலைக்குச் சென்ற இரு மாணவர்கள் வீடு திரும்பவில்லை என அவர்களது தாய்மார் மன்னார் பிரஜைகள் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தனித்தனியே கொடுக்கப்பட்ட இந்த இரு முறைப்பாடுகளிலும் இருந்து தெரியவருவதாவது -

முருங்கன் கள்ளி மோட்டையைச் சேர்ந்த திருமதி தங்கராசா (வயது 44) கொடுத்த முறைப்பாட்டின்படி அவரது மகன் ஜோன்சன் (வயது 13) கடந்த மாதம் 14 ஆம் திகதி பாடசாலைக்கு சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் - பனங்கட்டிக் கொட்டைச் சேர்ந்த திருமதி சூசையம்மா (வயது 52) கொடுத்த முறைப்பாட்டின்படி - அவரது மகன் அன்ரனி சுரேஸ்குமார் (வயது17) கடந்த மாதம் 24 ஆம் திகதி காலை பாடசாலைக்கு சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழு இவர்கள் இருவரினதும் முறைப்பாடுகளையும் மன்னாரில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்துக்கும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினருக்கும் தெரியப்படுத்தியிருப்பதுடன் காணாமல்போன இந்த இரு மாணவர்களையும் கண்டுபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

- திருக்குறள்.

## நமது நோக்கு

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சி!

தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் தேர்தல் தமிழகத்தில் பல புதிய மாற்றங்களை வெளிக்காட்டியிருக்கிறது.

முதலாவது - தமிழகத்தில் தேர்தல் என்றாலே வன்முறை, சாதிச் சண்டை, கொலைகள், வாக்கு மோசடி என்ற நிலை முற்றாகவே மாற்றம் கண்டிருக்கிறது.

எந்த வன்முறைகளும் இல்லாமல் தமிழகத்தில் தேர்தல் நடைபெற்றது என்று சொன்னால் - அதை நம்பவே முடியவில்லை. ஆனால், உண்மை அதுதான் என்றாகிவிட்டது.

இரண்டாவது - இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் பெருமளவில் வாக்களிப்பில் பங்கேற்றது. தமிழக வரலாற்றிலேயே அதிகளவான வாக்குப்பதிவு இடம் பெற்றிருக்கிறது. 77வீதமான வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களித்தனர்.

எந்தவொரு கட்சி மீதும் வெறுப்போ அல்லது சார்பான அலையோ வீசாத நிலையில் கூட 77 வீதமான மக்கள் வாக்களித்தது நல்லதொரு மாற்றம்.

அடுத்து - இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் அளித்திருக்கின்ற தீர்ப்பு. தி.மு.க, அ.தி.மு.க ஆகிய பிரதான கட்சிகளுக்கிடையே நிலவும் பரஸ்பரப் பகையே இந்த தேர்தலுக்கான கூட்டணியாக அமைந்தது.

பலமான கூட்டணியை அமைத்துக் கொண்டதால் தி.மு.க வெற்றி பெற்றிருக்கிறது. அதிகம் குறைகள் இல்லாமல் ஆட்சி நடத்திய போதும் ஜெயலலிதாவினால் கூட்டணியைப் பலம் வாய்ந்ததாக அமைக்க முடியாததால் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை.

ஆனால், தி.மு.க இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மத்திய அரசு செல்வாக்கு, பணபலம், தனது ஊடகப்பலம், கூட்டணிக் கட்சிகளின் பலம் ஆகியவற்றையெல்லாம் ஒன்றுதிரட்டி முயற்சித்திருக்கிறது.

இந்த வகையில் பார்க்கும்போது தி.மு.கவின் வெற்றி என்பது பெரிதாகக் குறிப்பிடக்கூடியதொன்றல்ல. தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும் கூட்டணிக் கட்சிகள் தவிர்ந்த வகையில் பார்க்கும் போது பெரியளவிலான வித்தியாசம் இல்லை என்றே கூறலாம்.

தி.மு.க அமைத்த கூட்டணியின் மூலம் அ.தி.மு.கவின் வெற்றி பாதிக்கப்பட்டதென்பதைவிட- விஜயகாந்த் கட்சி களத்தில் குதித்ததால் அதிக பாதிப்பு என்றும் சொல்லலாம்.

ஏனெனில், பல இடங்களில் பதின்னொன்கு, ஐம்பத்திரண்டு, நூற்றுநாற்பது நாற்பது என்று மிகச் சொற்ப வாக்கு வித்தியாசங்களில் கூட பலர் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

பல பிரபலங்கள் கூட அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறவில்லை. சில ஆயிரம் வாக்குகளால் வென்றோரே அதிகமாகவுள்ளனர்.

இந்தத் தேர்தலின் மூலம் 1952 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தி.மு.கவுக்கு தனித்துக் கிடைத்துள்ள ஆசனங்களின் எண்ணிக்கை சுமார் நூறு ஆகவுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழகம் கூட்டணி ஆட்சியை அரை நூற்றாண்டுக்குப் பின் சந்திக்கப்போகிறது - ஏதேச்சதிகார ஆட்சிக்கு முடிவு கட்டவும் புதிய மாற்றங்களுக்கும் இது வித்திடும் என்றே கருதப்படுகிறது.


வெற்றிக்காக தி.மு.க ஊடகங்களைப் பயன்படுத்திய விதம் - பணத்தை வீசிய விதம் என்பன ஆபத்தான அறிகுறியை வெளிப்படுத்தியிருந்ததென்பதால் இது தொடராமல், ஊடக சுதந்திரம் நிலை நிறுத்தப்படுவதற்கு கூட்டணி ஆட்சி வித்திடக்கூடும்.

இந்தத் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டது போல வை.கோவுக்கு ஆசனங்கள் கிடைக்கவில்லை. ஆனால், பா.ம.க ஓரளவுக்கு தன்னை நிலை நிறுத்தியிருக்கிறது. தமிழகத்தில் ஈழத்தமிழ் மக்களின் மீது கரிசனை கொண்ட கட்சிகளுக்கு கிடைத்த வெற்றி வரவேற்கத் தக்கது.

எது எப்படியோ தமிழகத்தில் ஏற்படும் புதிய சூழல் அங்கும் சரி; இங்கும் சரி; நல்ல மாற்றத்துக்கு வித்திடும் என்று நம்புவோம்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com


## நாடும் நடப்பும்




அரசின் தொடரும் இனவாதம்.....

# மாமனிதர் விக்னேஸ்வர் படுகொலையே பதற்றமான நிலை தோன்றக் காரணம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம் —

இலங்கையின் தற்போதைய பதற்ற நிலைமைகளுக்கு திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலையே கார ணம் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து நாடாளுமன்றம் முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த திங்கட்கிழமை கண்டன ஆர்ப்பாட் டம் நடத்தினர்.

6 மணிநேரமாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தின் முடிவில் மேலும் இரண்டு நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிவு செய்தனர்.

அதன் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியதாவது -

திருகோணலை தமிழ் மக்கள் பேரவைத்தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தான் தற்போதைய பதற்ற நிலைமைக்குக் காரணம். அதுதான் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான குண்டுத் தாக்குதலுக்கும் காரணமாக அமைந்தது.

விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்படாமல் இருந்திருந்தால் தற்போதைய நிலைமை நிச்சயம் ஏற்பட்டிருக்காது. கருணா குழுவை அமைதி முயற்சிகளில் இடம்பெற வைக்கக்கூடாது. தமிழ் மக்களால் ஏற்கப்பட்ட குழு அல்ல அது. இராணுவத்தின் உதவியுடன் இயங்கும் துணை இராணுவக் குழு அவ்வளவே.

தமிழ் மக்களின் பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். அண்மைய உள்ளூராட்சித் தேர்தலிலும் கூட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான முடிவையே மக்கள் வாக்குகள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

நீதிக்குப் புறம்பான படுகொலைகளை நிறுத்தி, துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களைந்தால் தான் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியங்கள் உண்டு.

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளின் கிளிநொச்சி பயணத்துக்கான வழமையான போக்குவரத்து ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறியதாவது -

ஜெனிவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 105 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சம்பூரில் விமானக் குண்டு வீச்சில் 20 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பு மற்றும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினது அறிக்கைகளின்படி தமிழ் மற்றும் முஸ்லிம்கள் இந்த விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## மேற்படிப்புக்கு வெளிநாடு செல்ல சென்ற

# மாணவனைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்படிப்புக்காக வெளிநாட்டுக்குப் படிக்கவெனச் செல்வதற்காகப் புறப்பட்ட மாணவனைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை செட்டியார் மடத்தைச் சேர்ந்த மகேஸ் வரன் உமாதரன் என்ற மாணவன் கடந்த 6 ஆம் திகதி வெளி நாடு செல்வதற்காக நீலநிற வானில் கிளிநொச்சி கண்டா வளையைச் சேர்ந்த சாரதி கந்தசாமி ஈழரங்கன் என்பவருடன் புறப்பட்டார்.

இருவரும் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியை அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சென்றடைந்தனர்.

அதன் பின்னர் இருவர் தொடர்பாகவும் அவர்கள் சென்ற வான் குறித்தும் மாணவரின் பெற்றோருக்கும், சாரதியின் உறவினர்களுக்கும் எந்தவித தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

இதையடுத்து வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் மேற்படி மாணவரின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

வானின் எண்: டபிள்யூ-பி-ஜே-யூ-7533 என்றும் மேற்படிப்புக்குச் செல்வதற்காக தனது மகன் புறப்பட்டுச் சென்றதாகவும் அந்த முறைப்பாட்டில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலை முட்கம்பி வேலியை வெட்டி சேதப்படுத்திய இராணுவம்

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்பாகவும் இந்தப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் இருந்து சுமார் 75 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நடேஸ்வராக் கல்லூரியின் தற்காலிக கட்டடத்தின் எல்லைக்குப் போடப்பட்டிருந்த முட்கம்பி வேலிகள் இராணுவத்தால் வெட்டி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் குறிப்பிட்ட கல்லூரியின் வேலியை வெட்டி உட்சென்ற இராணுவத்தினர் அங்கு இரவு காவல் கடமையில் இருந்தவரைப் பார்த்து இரவில் நிற்கத் தேவையில்லையெனக் கூறிச் சென்றுள்ளனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறபோதிலும் இராணுவத்தினர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்துகொண்ட முறையால் கல்லூரி பல ஆயிரக் கணக்கான ரூபா நட்டம் அடைந்துள்ளதுடன் பாடசாலையின் பாதுகாப்பும் சிதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட கல்லூரி கடந்த பல வருடங்களாக இடத்துக்கு இடம் அலைந்து தற்போதே ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

# இளையோர் தடகள போட்டி பிற்போடல்

நெடுந்தீவு —

யாழ். மாவட்ட மெய்வல்லுநனர் சங்கத்தால் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த இளையோர் தடகளப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவிருந்த இந்தப் போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகவும், இதேவேளை இதுவரைக்கும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காதோர் அவற்றை ஒப்படைக்குமாறும் மெய்வல்லுநர் சங்க செயலாளர் கேட்டுள்ளார். (113)

# இராணுவத் தளபதியைப் பாதுகாக்க முடியாமைக்காக வெட்கப்படவேண்டும்

இராணுவத் தளபதியை பாதுகாக்க முடியாமை பற்றி வெட்கப்படவேண்டுமென்ற தலைப்பில் - முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக 'லக்பிம' சிங்கள நாளிதழில் மே 8ஆம் திகதி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின் பின்னர் போர் நிறுத்த உடன்படிக்கையை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பாக பாதுகாப்பற்ற நிலை தோன்றியுள்ளதா? என்ற கேள்வி மிகவும் முக்கியமான ஒன்றாகும். வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கு மாத்திரமல்ல சர்வதேச சமூகத்துக்கும் இந்தப் பிரச்சினை தோன்றியிருப்பதாக நான் நினைக்கிறேன்.

விடுதலைப் புலிகள், படையினர், அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை கொல்வதும், பொதுமக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதனாலும், போர் நிறுத்த ஒப்பந்தத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமென நினைப்பதற்கு இன்று அதிகமானோர் தூண்டப்பட்டுள்ளனர்.

என்றுமே பயங்கரவாத அமைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை இவர்களது செயற்பாடுகள் நிறுத்தப்படுவதில்லை.

சமாதான ஒப்பந்தத்துக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் மூடப்பட்டிருந்த வீதிகளைத் திறந்தார். சோதனைச் சாவடிகளின் தொகைகளைக் குறைத்தார். பாதுகாப்பினால் மக்கள் கஷ்டப்பட்ட நெருக்கடிகளைக் குறைத்தார் என்பது உண்மை. ஆனால், இதனால் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை மற்றும் சரத் பொன்சேகாவை கொலை செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டுவது பிழையானது. எப்பொழுதாவது தீர்வு இல்லையென்றால் ஒரு முடிவு வரும் வரை வீதிகளை மூடிக்கொண்டு, எல்லா இடத்திலும் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி இருக்கவா கூறுகின்றீர்கள்?

பாதுகாப்பைக் குறைக்க வேண்டுமென நான் கூறவில்லை. இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக ஜே.வி.பியும், ஹெல உறுமயவுமே பிரசாரம் செய்கின்றனர். இந்தக் காரணம்தான் நான் எப்பொழுதும் சொல்வது ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய ஆகிய இரண்டும் கட்சிகளுக்கும் எவ்வித சந்தர்ப்பமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வழங்கத் தேவையில்லை. இரண்டாவது விடயம். சமாதானப் பேச்சுக்களை நீடித்துக்கொண்டிருக்காமல் விரைவில் தீர்வுக்குச் சென்று முடிவுகளைக் காண வேண்டும்.

விடுதலைப் புலிகளின் வன்செயல்கள் சாமான்யமானவை என்ற விதமாக நான் சொல்வதாக என்மீது நீங்கள் குற்றம் சாட்டுவது ஏன்? நான் விடுதலைப் புலிகளின் தன்மையை பகுப்பாய்ந்து, அதன் கடந்த கால செயற்பாடுகளை நன்றாகப் படித்து தெரிந்து கொண்டு மற்றும் கெரில்லா அமைப்புக்களின் தன்மையின் படியுமே.

இதுபோன்று சமாதான முயற்சிகள் இருக்கும்போது சரத் பொன்சேகாவை கொலை செய்ய மேற்கொண்ட முயற்சி பிழையென இலங்கையின் சமாதான முயற்சிகளில் அக்கறையுடைய இணைத்தலைமை நாடுகள் உட்பட முழு உலகுமே கண்டித்துள்ளன. இது தான் கெரில்லா இயக்கங்களின் சுபாவம். நாங்கள் செய்ய வேண்டியது - அதை கதைத்து விமர்சனம் செய்வதல்ல. உடனடியாக சமாதானப் பேச்சை ஆரம்பித்து முடிவுக்குப் போவதே.

அண்மையில் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட பின்பும் எங்களது பாதுகாப்பு பிரிவு, நாட்டின் தலைவர்கள், உயர் பிரமுகர்களின் பாதுகாப்பு பற்றி மீண்டும் நினைத்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு குறிப்பாகத் தெற்குக்கு வழங்கிய தற்காலிக சமாதான சூழலோடு எல்லாம் சரியென்று மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். நாட்டின் பாதுகாப்பின் உயர் இடமான இராணுவத் தலைமையகத்துக்குள்ளேயே இராணுவத் தளபதி மீது தற்கொலைக் குண்டுதாரி நுழைந்து பாய்ந்தார். தங்களது இராணுவத் தளபதிக்கு தங்களது மிகப் பெரியதும், தலைமையக முகாமின் உள்ளேயே பாதுகாப்பு வழங்குவதற்கு இயலாத விதமாக, பலவீனமாக இருந்த தலைவர்கள் குறித்து கேட்பதும் வெட்கத்துக்குரிய விடயமாகும்.

எங்கோ ஓரிடத்தில் பெரிய பிழை நேர்ந்துள்ளது. எல்லாவற்றையும் விடுதலைப் புலிகள் மீது சுமத்திவிட்டு, கைகளைக் கழுவிக்கொள்ள முடியுமா? எப்பொழுதுமே மக்கள் தலைவர்கள், முக்கிய அதிகாரிகள், விடுதலைப் புலிகளால் கொல்லப்படும்போது, பாதுகாப்பு பிரிவு எல்லாவற்றையும் புலிகள் மீது சுமத்திவிட்டு, வெறுமனே தங்களைப் பாதுகாக்கும் விதத்தை நாம் மறக்கவில்லை. தங்களது முகாமையும், தலைவரையும் பாதுகாக்க இயலாத இராணுவப்படைகள் மக்களையும், நாட்டையும் பாதுகாப்பது எப்படி?

பிரபாகரன் கடந்த மாவீரர் தின உரையில் கூறியது என்ன? மேலும் பொறுத்திருக்க முடியாதெனவும், தனது தனிநாடு தொடர்பாக



குறுகிய காலத்தில் விரைவாக தீர்வு வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார். நாங்கள் அந்த உரையை வெறும் வார்த்தை மாத்திரம் என கணக்கிலெடுத்தோம். இப்பொழுது என்ன நடைபெற்றுள்ளது. பிரபாகரன் கூறிய குறுகிய கால எல்லையின் முடிவு வந்துவிட்டது. குறுகியகாலம் என்பது வருடக் கணக்கல்ல.

மகிந்த ஜனாதிபதியானதன் பின்னர், விடுதலைப் புலிகளின் வடக்கு - கிழக்கிலான கொலைகள் மற்றும் வன்முறைகள் உக்கிரமடைந்தன. ஆனால், துரதிஷ்டவசமாக தெற்கின் அரசியல்வாதிகள் மற்றும் பொறுப்பான அதிகாரிகளுக்கு அதுவெறும் செய்தி போல ஆனது. வடக்கு - கிழக்கில் கிளைமோர் தாக்குதல்கள் மற்றும் இதர மோதல்களும் விடுதலைப் புலிகள் மீது தொடர்ச்சியாக ஆயுதக் குழுக்கள் மேற்கொண்ட தாக்குதல்களுக்குப் பின்னால் இருக்கும் முறைகளால் தோன்றும் பாரதூரமான நிலைமை குறித்து எவரும் கவனத்தில் எடுக்கவில்லை.

வட - கிழக்கில் வசிப்பவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் கணக்கிலெடுக்கப்படவில்லை. வட - கிழக்கில் என்ன நடந்தாலும், தெற்கில் எந்தவித பிரச்சினையும் இல்லாதது போன்று பெருமளவானோருக்கு மகிழ்வும் ஏற்பட்டது. யார், யாருக்கோ எல்லாம், கொழும்பில் பெரிய இடத்துக்கு குண்டு வந்த பின்பு தான் கடவுள்கள் நினைவுக்கு வந்தனர். இப்பொழுது எல்லோருக்கும் சமாதானம் தேவையாக உள்ளது. நாடாளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் ஓடிச்சென்று ஜனாதிபதியைச் சுற்றி உட்கார்ந்து சமாதானத் தீர்வை ஏற்படுத்த உதவி செய்வதாக வாக்குறுதி அளித்தனர்.

நோர்வேக்காரர்களை விரட்டுவோம். சமாதான ஒப்பந்தத்தை கிழித்தெறிவோம். ஜனாதிபதி, நோர்வே தரகர்களுடன் சேர்ந்து ரணிலைப் போன்று புலிகளுக்கு நாட்டைக் கொடுக்கப் போகின்றார் எனக் கூறி, நாடு முழுவதும் கோரிக்கைவிடுத்த ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் சர்வகட்சி மாநாட்டில் இருந்து சமாதானத்துக்காக ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக கூறுவது ஆச்சரியப்படத்தக்க விடயம்.

புரிந்துணர்வுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும் அரசின் இணக்கப்பாட்டைத் தவிர வேறு தீர்வில்லை என்பது எங்கள் கண்முன்னால் மீண்டும், மீண்டும் உறுதியாகி உள்ளது. அவ்வாறு இருக்கும் போது ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் மேலும் தெற்கின் இனவாதிகள் சிலரும் யுத்த ரீதியான தீர்வை ஏன் விரும்புகின்றனர் என்பது புரியவில்லை.

அரசாங்கம் இந்தளவுக்கு பாரதூரமான விளைவுக்கு முகம் கொடுத்தும் யுத்தத்துக்கு பதிலாக இனிமேலும் பேச்சு மேசையில் விடுதலைப் புலிகளுடன் அமர்வ தற்குள்ள தேவையை விலக்கிக் கொள்ளாமை பற்றி ஜனாதிபதி மகிந்தவை பாராட்ட வேண்டும். விடுதலைப் புலிகளும் பேச்சிலிருந்தோ அல்லது போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்தோ விலகப் போவதாகச் சொல்லவில்லை.

புலிகளையும் - அரசையும் பகை மூட்டுவதற்கும் - போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலக்குவதற்கும் மற்றும் பேச்சு மேசையிலிருந்து வெளியே தள்ளுவதற்கும் முயற்சி எடுப்பது தெற்கிலுள்ள சிங்கள பத்திரிகைகளே. அதேபோன்று, ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவும் சந்தர்ப்பவாத அரசியல்வாதி அமைப்புக்களுமே.

ஜெனிவாவில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் செல்வதை தவிர்த்துக் கொண்டது ஏன்? அவர்கள் குற்றம் சாட்டவேண்டியது, சாட்டுவது தெற்கின் அரசுக்கே. கிழக்கிலுள்ள தமது தளபதிகளை, வடக்குக்கு அழைத்து வருவதற்கு, விமான வசதியை வழங்க மறுத்த அரசாங்கம், அவர்களை அவர்களது படகுகளில் செல்வதற்குக் கூட அனுமதிக்கவில்லை. இவை எதுவித அர்த்தமும் இல்லாத சிறுபிள்ளைத்தனமான வேலை. மோட்டு ஆலோசகர்களின் பிழை யான ஆலோசனைகள். அப்படித் தடுப்பதற்கு நீதியான காரணங்களை அவர்கள் தெரிவிக்கவில்லை. அரசின் கடமையாக இருப்பது எங்கள் முன்னாலுள்ள நாட்டின் எதிர்காலம் பற்றிய பாதுகாப்பற்ற நிலை மற்றும் தீர்வை தேடும் கடினமான செயல்களில் வெற்றி கொள்ளும் வகையான அர்ப்பணிப்புகள் பற்றி நினைப்பதே.

விடுதலைப் புலிகளுக்கு விமானம் வழங்காமை, படகுப் பயணத்தைத் தடைசெய்தமை என்பவற்றை மிகப்பெரிய வீரச் செயல்கள் என்ற விதமாக சிங்களப் பத்திரிகைகளில் பெரிதாகப் போட்டார்கள். அரசைச் சேர்ந்தவர்களும் கதைத்தார்கள். இறுதியில் விடுதலைப் புலி களை ஜெனிவா கொண்டு செல்வதற்கு, அவர் களின் முன்னால், அரசாங்கத்துக்கு எவ்வளவு தூரம் இயலாமற்போனது. கேட்பது எல்லாவற்றையும் தருவதாக சொன்னார்கள். இன்னமும் ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் மகிந்த ராஜபக்ஷவுடன் செய்து கொண்ட 12 நிபந்தனைகளுடன் கூடிய அரசியல் உடன்பாட்டு ஒப்பந்தத்தால், இந்த இரு கட்சிகளும், இதன் போது அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இறுதியில் கிடைத்த வெற்றி என்னவென்றால் ஏப்ரல் 24ஆம் திகதி ஜெனிவா பேச்சுக்கு பதிலாக ஏப்ரல் 25ஆம் திகதி நான்கு வருடங்களுக்குப் பின்னர் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் குண்டுத்தாக்குதல். எவருமே வெற்றியைப் பெறவில்லை.

கடுமையான நீதிச் சட்ட, நிபந்தனைகள், அழுத்தங்களைக் கொடுத்து சமாதானம் குறித்து பேசுவதற்கு விடுதலைப் புலிகளை அழைத்து வர முடியாதென ரணில் சொல்லிக் கொடுத்த பாடத்தின் பெறுமதியை ஒருசிலர் மறந்துவிட்டனர். இரு தரப்பிடையேயும் சிக்கலை ஏற்படுத்திக்கொள்ளாத புத்தியோடும், பொறுமையுடனும் கூடிய உபாய மார்க்கத்தின் மூலம் ரணில், விடுதலைப் புலிகளை இறுதியில் வளைத்துக் கொண்டார். ஏப்ரல் 24இல் பேச்சு ஆரம்பமாகி இருந்தால் இராணுவத் தலைமையகத்தில் குண்டு வெடித்திருக்கமாட்டாது.

இந்த விடயத்தையும் பிடித்துக்கொண்டு அந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததற்கு அரசாங்கம் தடையை ஏற்படுத்திக் கொள்வது ஏன் என முழு உலகமுமே ஆச்சரியப் படுகிறது. வட - கிழக்கில் ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்குவதற்கு ஜெனிவா பேச்சில் அரசு உடன்பட்டது. அது செய்ய முடியாததென அதிக விமர்சனம் தொடுக்கப்பட்டது. அந்த விமர்சனங்கள் அசாதாரணமானவை என்பது எனது கருத்தாகும். மிகப் பெரிய படை மற்றும் அதிகாரத்தை வைத்திருக்கும் அரசாங்கத்துக்கு உத்தியோகப்பற்றற்ற ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்த இயலாமல் இல்லை.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் நிர்வாகங்கள் எங்களது கைகளில். புதிய அரசாங்கத்தின் இராணுவம், பொலிஸ் மற்றும் இனம் தெரியாத ஏனைய ஆயுதக் குழுக்களால் தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதிருப்பதாக விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு செய்கின்றனர்.

அதே போன்று படையினர் அவர் களுக்கு அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்படுவதற்கு இடம் வழங்குவதுடன் அவர்களது நடவடிக்கைகளை கண்டு கொள்ளாதவர்கள் போல் இருப்பதாகவும் புலிகள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்த முடியாதென்றால் ஏன் அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன்னால் அதற்கு உடன்பட்டது?

வட - கிழக்கை இணைப்பது தொடர்பான பிரச்சினையை இப்பொழுதே எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இது அதிகாரத்தைப் பங்கிடும் அல்லது அரசியல் தீர்வு பற்றி இறுதி முடிவு எடுக்கும் போது கலந்துரையாடப்பட வேண்டிய ஒன்று. அரசியல்வாதிகள் தமக்கு வேண்டிய விதமாக தீர்மானமெடுப்பது தீர்வாகாது. அதிகாரத்தைப் பங்கிடுவதன் அர்த்தம் அந்தந்த மக்கள் குழுக்களுக்கு தமது இன அடையாளங்களைப் பாதுகாத்துக் கொண்டு, பொது நாடு என்ற விதமாக நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு திட்டம். இந்தியாவில் அந்த முறையே உள்ளது.


ஒற்றையாட்சியா? ஒன்றுபட்ட இலங்கையா? என்ற கதைகள் இந்த அரசியல்வாதிகளினதும், அவர்களுக்கு பந்தம் பிடிப்பவர்களினதும் விகாரமடைந்த கதை. இரு தரப்புமே ஏற்றுக் கொள்ளக்கூடிய அநீதி இல்லாத மற்றும் நீண்ட காலத்துக்கான சமாதானத்தைக் கொண்டு வருகின்ற தீர்வெனில் அது போதும். எந்தத் தீர்வைக் கொண்டு வந்தாலும் இலங்கை எனும் தீர்வுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். வட-கிழக்கு மற்றும் தெற்கு என அனைத்து மக்களுக்கும் தேவைப்படுவது தமது உயிர்களைப் பாதுகாத்து கடவுளே! என அமைதியாக வாழ்க்கையை கொண்டு செல்ல வேண்டும், வேலை செய்ய வேண்டும்.

குண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்தவுடன் சம்பூரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல் எவரும் பெற்ற வெற்றியாக காண்பிக்க முடியாது. அகதிகளான உயிரிழந்த மற்றும் காயப்பட்டவர்கள் குறித்த நிச்சயமான தகவலும் இல்லை. தாக்குதல் தொடுக்கும் போது பதில் தாக்குதல் நடத்துவது சாதாரணமானது. ஆனால், பிரச்சினை- இதற்கு முன் பலதடவை விடுதலைப் புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்திய போது அரசு பதில் தாக்குதல் நடத்தாதது ஏன்? எவ்வாறாயினும் குண்டு வெடிப்புக்கள், தாக்குதல்களை எவர் மேற் கொண்டாலும் எந்தத் தரப்பும் வெற்றி பெறவில்லை. இருதரப்புமே தோல்வியையே காண்கின்றன.

சாதாரண பொது மக்களது இயல்பு வாழ்வை நாசம் செய்து, அவர்களைத் துன்புறுத்தி, பெறுமதி வாய்ந்த ஏனைய உயிர்களை அகாலமாக அழிப்பது மாத்திரமே கிடைக்கின்ற பெறுபேறாகும். இரத்தத்தை [illegible] எனும் உத்தம பொரு[illegible] நாடோ, இனமோ உ[illegible] இல்லை.

தமிழில் - நாடோடி

# சேப்பாக்கத்தில் கருணாநிதி ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதா



சென்னை —

தி.மு.க தலைவர் கருணாநிதி சேப்பாக்கம் தொகுதியில் வெற்றிபெற்றார். அவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட முஸ்லிம் லீக் வேட்பாளர் தாவூது மியாகானை 8,522 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கருணாநிதி தேர்தலில் பெற்ற 11 ஆவது வெற்றி இதுவாகும். இதுவரை அவர் தேர்தலில் தோற்றது கிடையாது. சேப்பாக்கம் தொகுதியில் 3 ஆவது முறையாக வெற்றிபெற்றுள்ளார்.

1957ஆம் ஆண்டு குளித்தலையிலும், 1962 ஆம் ஆண்டு தஞ்சையிலும், 1967, 1971 ஆம் ஆண்டுகளில் சைதாப்பேட்டையிலும், 1977, 1980 ஆம் ஆண்டுகளில் அண்ணாநகரிலும், 1989, 1991 ஆம் ஆண்டுகளில் துறைமுகத்திலும், 1996, 2001 ஆம் ஆண்டு சேப்பாக்கத்திலும் வெற்றி பெற்றார்.

சேப்பாக்கம் தொகுதி வாக்கு விபரம் -

கருணாநிதி (தி.மு.க) 34184, தாவூது மியாகான் (முஸ்லிம் லீக்) 25 662, நாராயணசாமி (தே.மு.தி.க) 3681.

அதேவேளை, முதலமைச்சர் ஜெயலலிதா போட்டியிட்ட ஆண்டிப்பட்டி தொகுதியில் சுமார் 25 ஆயிரத்து 186 வாக்குகள் அதிகம் பெற்று பெற்றிபெற்றார்.



ஜெயலலிதா(அ.தி.மு.க) 73,927 சீமான் (தி.மு.க) 48,741.




# புதுச்சேரியில் மீண்டும் காங்கிரஸின் ஆட்சி!

புதுச்சேரி —

புதுச்சேரியில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆட்சியமைத்துள்ளது. புதுச்சேரி மாநிலத்தில் மொத்தம் 30 சட்ட மன்ற தொகுதிகள் உள்ளன. இதில் காங்கிரஸ் - தி.மு.க ஒரு அணியாகவும், அ.தி.மு.க கண்ணன் கட்சி ஆகியவை தனி அணியாகவும் நின்றன.

இதில் காங்கிரஸ் கூட்டணிக்கு 20 இடங்கள் கிடைத்தன. காங்கிரஸ் 10 இடங்களிலும், தி.மு.க 7 இடங்களிலும், பா.ம.க 2 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் ஒரு இடத்திலும் வெற்றிபெற்றன.

அ.தி.மு.க கூட்டணிக்கு 7 இடங்கள் கிடைத்தன. அ.தி.மு.க 3 தொகுதிகளிலும், கண்ணனின் புதுவை முன்னேற்ற காங்கிரஸ் 3 இடங்களிலும், ம.தி.மு.க ஒரு இடத்திலும் வெற்றி பெற்றன.

காங்கிரஸ் கூட்டணி 20 இடங்களைப் பெற்றிருப்பதன் மூலம் மீண்டும் அங்கு காங்கிரஸ் ஆட்சி அமைகிறது. ஆனால் நெல்லித்தோப்பு தொகுதியில் தி.மு.க சார்பில் போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சரும், மாநில தி.மு.க அமைப்பாளருமான ஜானகிராமன் தோல்வியடைந்தார்.

# 409 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார் அன்பழகன்!

சென்னை —



தி.மு.க பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அன்பழகன் துறைமுகம் தொகுதியில் ம.தி.மு.க வேட்பாளரை 409 வாக்குகளால் மட்டுமே வெற்றி பெற்றார்.

அன்பழகன் (தி.மு.க) - 26544,
சீமா பசீர் (ம.தி.மு.க) - 26135,
சந்திரப்பிரகாசம் (தே.மு.தி.க) - 4781 வாக்குகள்

எழும்பூர் தொகுதியில் தி.மு.க வேட்பாளர் பரிதி இளம்வழுதி 6480 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பரிதி இளம்வழுதி (தி.மு.க) - 38 455, சத்யா (ம.தி.மு.க) - 31975, எத்திராஜ் (தே.மு.தி.க) 6071 வாக்குகள் பெற்றார்.

# விஜயகாந் வெற்றிபெற்றார்!

சென்னை —

தமிழக சட்டசபைத்தேர்தலில் போட்டியிட்ட நடிகர் விஜயகாந் விருத்தாசலம் தொகுதியில் வெற்றி பெற்ற அதேவேளை, அவரது கட்சி இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றுள்ளது.

விஜயகாந் தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியை தொடங்கி 232 தொகுதிகளில் தனித்து போட்டியிட்டு விருத்தாசலத்தில் 14 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

அவருடைய கட்சி போட்டியிட்ட பெரும்பாலான இடங்களில் அதிக வாக்குகள் பெற்று 3 ஆவது இடத்தை பிடித்துள்ளது. அவரது கட்சி பெரிய கட்சிகளுக்கு பெரும் சவாலாகவே அமைந்து விட்டது.

பண்ருட்டி தொகுதியில் இந்தக் கட்சியின் பிரமுகர் பண்ருட்டி ராமச்சந்திரன் 140 வாக்குகளால் பா.ம.க வேட்பாளரிடம் தோல்வியுற்றார்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் விஜயகாந்தின் தே.மு.தி.க. 30 ஆயிரத்து 96 வாக்குகளை பெற்றுள்ளது. இங்கு காங்கிரஸ் 70 ஆயிரம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. எதிர்த்துப் போட்டியிட்ட விடுதலைச் சிறுத்தைகளுக்கு 52 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன.

இந்தத் தொகுதியில் விஜயகாந் கட்சி பெற்ற 30 ஆயிரம் வாக்குகள் விடுதலைச் சிறுத்தைகளுக்கு கிடைத்திருந்தால் அ.தி.மு.க கூட்டணி வெற்றி பெற்றிருக்கும்.

தாம்பரம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் மொத்தம் 89 ஆயிரம் வாக்குகள் பெற்றார். ம.தி.மு.க.வுக்கு 73 ஆயிரம் வாக்குகள் கிடைத்தது. இந்தத் தொகுதியில் தே.மு.தி.க 15 ஆயிரத்து 750 வாக்குகள் பெற்றுள்ளது. இந்த வாக்கு கிடைத்திருந்தால் ம.தி.மு.க. வெற்றி பெற்றிருக்கும். அச்சரபாக்கத்தில் தே.மு.தி.க.10 ஆயிரத்து 500 வாக்குகளும், காஞ்சிபுரத்தில் 15 ஆயிரம் வாக்குகளும் பெற்றுள்ளது.



இது போல தமிழ்நாட்டின் பெரும்பாலான தொகுதிகளில் விஜயகாந்தின் தே.மு.தி.க. அதிக அளவில் வாக்குகளைப் பெற்றுள்ளது. வாக்குகள் பிரித்ததால் பல தொகுதிகளில் அ.தி.மு.க கூட்டணி கட்சிளும், சில தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி கட்சிகளும் தோல்வி அடைந்துள்ளன.

மொத்தத்தில் விஜயகாந் கட்சி பெரிய கட்சிகளுக்கு பெரும் சவாலாக இருந்துள்ளது.

# ரேபரேலி தொகுதியில் சோனியா அமோக வெற்றி



ரேபரேலி —

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது எம்.பி பதவியை ராஜினாமா செய்ததையடுத்து அவரது தொகுதியான ரேபரேலியில் இடைத் தேர்தல் நடைபெற்றது. இதில் சோனியா காந்தி மீண்டும் போட்டியிட்டார்.

அவரை எதிர்த்து சமாஜ்வாதி கட்சி சார்பில் ராஜ்குமார் சௌத்திரி போட்டியிட்டார்.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியதிலிருந்தே சோனியா காந்தி முன்னணியில் இருந்தார். இந்தத் தொகுதியில் மொத்தம் 5 லட்சத்து 90 வாக்குகள் பதிவாகியிருந்தன.

பதிவான வாக்குகளில் பெரும்பாலான வாக்குகள் சோனியாவுக்கே கிடைத்திருந்தன.

3 லட்சம் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் சோனியாவுக்கு 2 லட்சத்து 49 ஆயிரம் வாக்குகளும், ராஜ்குமார் சௌத்திரிக்கு 29 ஆயிரம் வாக்குகளும் கிடைத்திருந்தன.

வாக்கு வித்தியாசம் மட்டுமே 2 லட்சத்து 20 ஆயிரமாக இருந்தது.

மேலும் வாக்குகள் எண்ணப்பட்ட போது 4 லட்சத்து 17 ஆயிரத்து 888 வாக்குகள் வித்தியாசத்தில் சோனியா அபார வெற்றிபெற்றார்.

# அ.தி.மு.க தோல்வியால் ஜெயலலிதா ராஜினாமா!

சென்னை —

சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியடைந்து புதிய ஆட்சி அமைவதையொட்டி முதல்வர் ஜெயலலிதா தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதற்கான கடிதத்தை அமைச்சர் ஜெயக்குமார் மூலம் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலாவுக்கு அவர் நேற்று அனுப்பி வைத்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க அணி வெற்றி பெற்றுஆட்சியைப் பிடித்துள்ளது. இதையடுத்து முதல்வர் பதவியை ராஜினாமா செய்து, முறைப்படி கடிதத்தை ஜெயலலிதா அனுப்பியுள்ளார்.

# சென்னையில் அ.தி.மு.க 7 தொகுதிகளில் வெற்றி!

சென்னை —

தி.மு.க.வின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் சென்னையில் இம்முறை அ.தி.மு.க.கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளது.

சென்னையிலுள்ள 14 தொகுதிகளில் அ.தி.மு.க. 7 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ராயபுரம்,ஆர்.கே. நகர், தி.நகர், சைதாப்பேட்டை, மயிலாப்பூர் பூங்காநகர், திருவல்லிக்கேணி தொகுதிகளில் வெற்றி பெற்றது.

### ராயபுரம் தொகுதி

ஜெயக்குமார் (அ.தி.மு.க) - 50, 646, சற்குணபாண்டியன் (தி.மு.க) 37,139, பாபு(தே.மு.தி.க)-5,033

### பூங்காநகர் தொகுதி

சீனிவாசன் (அ.தி.மு.க) 34,314 ரகுமான்கான்(தி.மு.க) 27,947, கு. பாலசுப்பிரமணியன் (தே.மு.தி.க) 5,300

### சைதாப்பேட்டை தொகுதி

செந்தமிழன்(அ.தி.மு.க) 75, 973, பாஸ்கரன்(பா.ம.க)70,068, வேணுகோபால் (தே.மு.தி.க) 11,675

### திருவல்லிக்கேணி தொகுதி

பதர் சயீத்(அ.தி.மு.க) 40,403, நாகநாதன்(தி.மு.க) 37,623,

### ஆர்.கே.நகர் தொகுதி

சேகர் பாபு(அ.தி.மு.க) 84,462, மனோ(காங்கிரஸ்) 66,399, முகமது ஜோன் (தே.மு.தி.க) 11,716

### தி.நகர் தொகுதி

வி.பி.கலைராஜன் (அ.தி.மு.க) 74,131, ஜெ.அன்பழகன் (தி.மு.க) 57, 654, பாண்டியன் (தே.மு.தி.க) 8,824

### மயிலாப்பூர் தொகுதி

எஸ்.வி .சேகர் (அ.தி.மு.க) 62, 787, நெப்போலியன்(தி.மு.க) 61,110

கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க ராயபுரம்,ஆர்.கே.நகர் தொகுதியிலும் , கூட்டணி கட்சியான காங்கிரஸ் பூங்கா நகரிலும், வெற்றி பெற்றது. தற்போது அ.தி.மு.க 7 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது.

# 13 ஆண்டுகளுக்குப் பின்னர் சட்டசபைக்குள் ம.தி.மு.க!

சென்னை —

கட்சி தொடங்கி 13 ஆண்டுகளுக்குப் பின்பு முதல் முறையாக சட்டப் பேரவையில் நுழைந்திருக்கிறது வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க.

1993 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தக் கட்சி முதல் முறையாக 1996 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டது. அப்போது சட்டப் பேரவைத் தேர்தலிலும் மக்களவைத் தேர்தலிலும் அந்தக் கட்சி போட்டியிட்டு தோல்வியடைந்தது.

பின்னர் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டது. அந்தத் தேர்தலிலும் ஒரு வேட்பாளரும் வெற்றிபெறவில்லை.

தற்போது அ.தி.மு.க கூட்டணியில் இடம்பெற்ற ம.தி.மு.க வெற்றிபெற்று, 6 இடங்களைப் பிடித்துள்ளது. அந்தக் கட்சி உருவாகி 13 ஆண்டுகள் கழித்தே சட்டப் பேரவைக்குள் நுழைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் காங்கிரஸ் ஆட்சியை இழந்தது!

திருவனந்தபுரம் —

கேரளாவில் நடந்த சட்டசபைத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தது.



கேரளாவில் மொத்தம் 140 சட்டசபைத் தொகுதிகளுக்குத் தேர்தல் நடந்தது. இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் ஒரு அணியாகவும், காங்கிரஸ் தலைமையில் இன்னொரு அணியாகவும் போட்டியிட்டன.

140 தொகுதிகளிலும் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டபோது கம்யூ னிஸ்ட் கூட்டணி 100 இடங்களில் வெற்றிபெற்றது. காங்கிரஸ் தலைமையிலான யு.டி.எப் கூட்டணிக்கு 49 இடங்களே கிடைத்தன. கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி பெரும்பான்மையுடன் ஆட்சி யைப் பிடித்தது. இதுவரை பதவியிலிருந்த காங்கிரஸ் ஆட்சியை இழந்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மூத்த தலைவரான வீ.எஸ்.அச்சுதானந்தன் மலம்புழா தொகுதியில் போட்டியிட்டார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் சதீசன் பச்சேனியை 2001 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.அவரே முதலமைச்சராவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கருணாகரனின் ஜனநாயக இந்திரா காங்கிரஸுக்கு ஒரு இடம் மட்டுமே கிடைத்தது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பணிப் புறக்கணிப்பைத் தொடருமாறு தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

அப்பாவி மக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் படுகொலைகளை உடன் நிறுத்துமாறும் வலியுறுத்தி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கும் அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு செல்வதையும், வரவுப் பதிவேட்டில் கையெழுத்திடுவதையும் தவிர்க்குமாறு யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த சனிக்கிழமை முதல் யாழ். குடாநாடு எங்கும் இடம் பெற்று வரும் பணிப்புறக்கணிப்பு, அரசாங்கத்தை பெரும் இக்கட்டில் ஆழ்த்தியுள்ளது. கேட்பார் யாருமின்றி தமிழ்த் தேசத்தின் பற்றாளர்களை படுகொலை செய்துவந்த அரசின் புலனாய்வுத் துறையினரும், ஒட்டுப்படையினரும் கொத்துக் கொத்தாக எமது இளம் குருத்துக்களை புத்தூரிலும், நெல்லியடியிலும், மந்துவிலிலும் கொன்றொழிக்க ஆரம்பித்த வேளையிலேயே யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் பணிப்புறக்கணிப்புக்கான வேண்டுகோளை முன்வைத்தது.

கொடூரமுகம் படைத்த ஆயுதம் தாங்கிய அரக்கர்களை எதிர்த்து நிராயுதபாணிகளான தமிழ்த் தேசத்தில் உள்ள அரச நிர்வாக பணியாளர்கள் மேற்கொண்டு வரும் மௌன யுத்தம் அரசை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

நேற்று முதல் இராணுவ அதிகாரிகள் தமிழ் பணியாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் பணிப்புறக்கணிப்பினை முறியடிக்கும் முனைப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த அச்சுறுத்தலுக்கு எவரேனும் அடிபணிய வேண்டாமென நாம் வேண்டுகிறோம்.

எமது உடல்களை சுட்டு வீழ்த்தினும் எமக்குள் இருக்கும் தமிழ்தேச ஆன்மாவை ஒருபோதும் வீழ்த்திவிட முடியாது என்பதை எதிர்வரும் தினங்களில் அரசுக்கு நன்கு உணர்த்துவோம்.

தமிழ் தேசத்தின் ஒவ்வொரு தொழிற்சங்கமும் தனது அங்கத்தவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதை தயவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளவும். அனாவசியமான முறையில் தமது பணியிடங்களுக்கு செல்வதையும், வரவுப்பதிவேட்டில் கையெழுத்திடுவதையும், நிர்வாகிகள் வரவை வலியுறுத்துவதையும் தவிர்க்கும்படி தனது அங்கத்தவர்களை வேண்டிக்கொள்ளுமாறு தொழிற்சங்க நிர்வாகங்களை நாம் அன்புடன் வேண்டுகிறோம்.

மனிதாபிமான அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த சகல அரச நிர்வாக பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பணிப்புறக்கணிப்பு - பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் மறு அறிவித்தல் வரும்வரை தொடர்ந்து இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க கூட்டணிக்கு தமிழகத்தில் வெற்றி!

சென்னை —

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி 163 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது.

தி.மு.கவுக்கு 96 இடங்களும், காங்கிரசுக்கு 34 இடங்களும், பா.ம.கவுக்கு 18 இடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 06 இடங்களும், மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிககு 09 இடங்களும் கிடைத்துள்ளன.

சுமார் 163 தொகுதிகளில் வெற்றி பெற்ற தி.மு.க கூட்டணியில் அறுதிப் பெரும்பான்மையை தி.மு.க தனித்துப் பெறாததால் கூட்டணி ஆட்சியை அமைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதேவேளை, அ.தி.மு.க கூட்டணிக்கு இந்தத் தேர்தலில் 69 தொகுதிகள் கிடைத்துள்ளன. இதில் அ.தி.மு.கவுக்கு 61, ம.தி.மு.கவுக்கு 06, விடுதலைச் சிறுத்தைகள் 02 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.

இந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற தி.மு.க தலைவர் மு.கருணாநிதி நாளை தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் புலிகளின் பகுதிகள்மீது படையினர் அகோர தாக்குதல்!

திருகோணமலை —

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூரை நோக்கி முப்படையினரும் கருணா குழுவினரும் நேற்று நடத்திய எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் பெருமளவான மக்கள் குடியிருப்புக்கள் சேதமடைந்தன.

எனினும் இந்தத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

மூதூர் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான சம்பூர், கடற்கரைசேனை, இறால்குழி, உப்பாறு, சூடைக்குடா, கிராமங்கள் மீது நேற்று மாலை திருகோணமலை பிளான்ரன் பொயின்ட் 22 ஆவது பிரிகேட் தலைமையக படைத்தளத்தில் இருந்தும் கடற்படைத்தளத்தில் இருந்தும் சரமாரியான எறிகணை மற்றும் பல்குழல் பீரங்கி ஷெல் தாக்குதல் மெற்கொள்ளப்பட்டது.

நேற்றுமாலை 5.50மணியளவில் ஆரம்பமான இந்த தாக்குதல் மாலை 6.40 வரை தொடர்ந்து நடைபெற்றது. இதனால் பெருமளவு குடியிருப்புக்கள் பலத்த சேதமடைந்ததாக தெரியவருகிறது.

நேற்று பகல் 1.30 மணியளவில் மூதூர் இறங்கு துறையை அண்மித்துள்ள வட்டம் என்ற கிராமத்தின் ஊடாக கடற்படையினரின் துணையுடன் கருணா குழுவினர் கடற்கரைச் சேனையிலுள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதேவேளை கடற்படை டோறாப்படகுகளும் கடலில் இருந்து கடற்கரைச் சேனைப்பகுதி மீது பீரங்கித் தாக்குதலில் ஈடுபட்டன.

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்ட தலைவருக்கு-திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் முறைப்பாடு செய்தார். இதனை அடுத்து கண்காணிப்புக்குழுவினர் பகல் 2.40 மணியளவில் மூதூர் இறங்குதுறைப் பகுதிக்கு கடற்படையின் பீரங்கிப் படகொன்றில் சென்றனர். இதன்போது கடற்கரைச்சேனை நோக்கி இராணுவத்தினரும் கருணா குழுவினரும் ஆயுதங்கள் மூலம் தாக்குதலை நடத்தினர். இதனை அவதானித்துக் கொண்டிருந்த கண்காணிப்புக்குழுவினர் சென்ற படகை நோக்கி துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டன.

இதேவேளை பிற்பகல் 4.30 மணிக்கு மீண்டும் கடற்படைப்படகுகள் கடற்கரைச் சேனை, உப்பாறு பகுதிகள்மீது பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதனால் பொதுமக்கள் குடியிருப்புக்களுக்கு சேதமேற்பட்டுள்ளது என்றும் தொடர்ந்து தாக்குதல் நடைபெற்று வருவதால் சேத விபரங்களை அறியமுடியாதுள்ளது என்றும் எழிலன் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளார்.

## காயமுற்ற சிப்பாய் உயிரிழப்பு!

கொழும்பு —

திருகோணமலையில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படுகாயமுற்ற கடற்படைச் சிப்பாய் ஒருவர் வைத்திய சிகிச்சை பலனளிக்காமல் மரணமானார்.

கடந்த முதலாம் திகதி திருகோணமலை சிவன்கோவிலடியில் கிளைமோர் தாக்குதலில் காயமுற்ற ஜெயதேவ என்ற கடற்படைச் சிப்பாயே கடந்த 8ஆம் திகதி மரணமானார்.

## கிரனேட் வீச்சில் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம் —

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டுப் பிரதேசத்தில் நேற்று பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே மேற்படி தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 17 கடற்படையினர்...

சுமார் 15 கடற்புலிப் படகுகள், கடற்படையின் படகுகளைச் சூழ்ந்து கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும், சுமார் 5 மணியளவில் கடற்படையின் அதிவேக தாக்குதல் படகொன்று- வெடி குண்டு நிரப்பப்பட்ட படகு மோதி வெடித்ததால் மூழ்கடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

P 418 தொடரிலக்கத்தைக் கொண்ட இந்த இஸ்ரேலியத் தயாரிப்பு டோறாவில் இருந்த இரு அதிகாரிகளும் 15 கடற்படையினரும் காணாமற் போயுள்ளனர்.

இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அதேவேளை ஒரு டோறா மூழ்கடிக்கப்பட்டதையடுத்து கடற்புலிகளின் படகுகள் கடற்படையின் துருப்புக் காவியைச் சூழ்ந்துகொண்டு தாக்குதல் நடத்தியதாகவும், மற்றைய டோறா தொடர்ந்து துருப்புக்காவிக்கு பாதுகாப்பாக சண்டையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துருப்புக்காவியிலும் மற்றைய டோறாவிலும் கடற் கண்காணிப்பாளர்கள் இருந்ததால் அவற்றின்மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை, இந்தத் தாக்குதலையடுத்து விமானப்படையின் எம்.ஐ. 24 தாக்குதல் ஹெலிகொப்டர்களும், கிபிர் ஜெட் போர் விமானங்களும் உதவிக்கு அழைக்கப்பட்டன.

இவை கடற்புலிகளின் படகுகளை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலில் - நான்கு படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் டி.கே.தசநாயக்க தெரிவித்தார்.

சுமார் இரண்டரை மணி நேரம் நீடித்த கடற்சமரின் பின்னர் - துருப்புக்காவிக் கப்பல் இந்திய கடற்பகுதிக்குள் பிரவேசித்தது.

இது தொடர்ந்தும் அங்கேயே தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துருப்புக் காவிக் கப்பலை திருகோணமலைக்கு கொண்டுவந்து சேர்ப்பதற்கு இலங்கை கடற்படை, இந்தியாவிடம் உதவி கோரியதாகவும் - ஆனால், வடக்கு-கிழக்குப் பகுதிக்கு தம்மால் கொண்டுசெல்வதற்கு உதவிகளை வழங்கமுடியாததெனவும் -

தேவையானால்காலிக்கு கொண்டு செல்வதற்கு உதவத் தயார் என இந்தியத் தரப்பால் தெரிவிக்கப்பட்டதாகவும் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இந்தக் கடற்சண்டையில் இரண்டு அதிவேக தாக்குதல் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாக கண்காணிப்புக் குழு பேச்சாளரை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால், கடற்படைப் பேச்சாளர் அதனை நிராகரித்தார். தமது தரப்பில் ஒரு டோறாவை மட்டுமே இழந்து 710 பேருடன் சென்ற துருப்புக்காவியை பாதுகாத்துக் கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

## வன்னிப்...

இதனிடையே வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் மோதல் ஆரம்பித்ததையடுத்து நாகர் கோயில் பகுதியிலிருந்து படையினர் தொடர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கடற்சண்டை மற்றும் ஆட்லறி தாக்குதல் சத்தங்கள் நேற்று மாலை வடமராட்சிப் பகுதியில் கேட்டதால் பொதுமக்கள் பெரும் பரபரப்படைந்து காணப்பட்டனர்.

# கடமைக்குத் திரும்புமாறு படையினர் நிர்ப்பந்தம்!

யாழ்ப்பாணம் —

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கும் அரச ஊழியர்களை கடமைக்குத் திரும்புமாறு யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அரச ஊழியர்களின் சேவை அத்தியாவசியமாக இருப்பதனால் கடமைக்குத் திரும்பாத அரச ஊழியர்கள் அனைவரையும் நேற்றுமுதல் கட்டாயமாக கடமைக்குத் திரும்ப வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தேசியத்...

சமூக நீதித்தன்மையோடும், நடுநிலையோடும் ட்றொன்ட் புறூவ் ஹொவ்டே ஆற்றிய அரும் பணிகள் என்றும் பாராட்டுக்குரியவை.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறூவ் ஹொவ்டே காலமானது குறித்து எமது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம் என இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடலில்...

கட்டுப்பாட்டில் உள்ளதாகும். சர்வதேச சட்ட விதிகளின்படி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரால் இது ஏற்கப்பட்டுள்ளது. அரச சார்பற்றோர் எவரும் கடல் மற்றும் வான் வழிகளைப் பயன்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளுக்கும் உரிமை இல்லை.

கடற்படையினருடன் இணைந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று விடுதலைப் புலிகள் எச்சரித்தனர். இத்தகைய அச்சுறுத்தல்களை நாம் பாரதூரமாகப் பார்க்கிறோம். போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கமைய கண்காணிப்பாளர்களின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடாது என்ற பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு உண்டு.

ஆகையால் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் உடனே கைவிடவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம். இத்தகைய நடவடிக்கைகள் சமாதான பேச்சுக்களை சீர்குலைத்து போருக்கு வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேஜர்...

சர்வதேச நாடுகளில் கண்காணிப்புக் குழுக்களில் பணியாற்றிய இவர் - 1993ஆம் ஆண்டு முதல் லெபனானில் ஐந்து வருடங்கள் கண்காணிப்பாளராக கடமையாற்றினார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவர் இலங்கையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது சுகவீனமுற்றதால், கண்காணிப்புக் குழு தலைமைப் பதவியிலிருந்து விலகி - தனது சொந்த நாட்டுக்குத் திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# படையினர் தாக்கியதாக குடும்பஸ்தர் முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

அச்சுவேலி பகுதியில் இராணுவத்தினர் படுமோசமாக தாக்கி படுகாயத்துக்குட்படுத்தியதாகத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தும்பளை முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த கந்தையா சிவபாலசுந்தரம் (வயது 39) என்பவரே முறைப்பாடு செய்தவராவார்.

பருத்தித்துறை நகரில் சிகை அலங்கரிப்பு நிலையத்தின் உரிமையாளர் வெள்ளை வானில் வந்த இனந்தெரியா நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்வதற்காக சென்று கொண்டிருந்தவேளை அச்சுவேலிப் பகுதியில் வழிமறித்த இராணுவத்தினர் தம்மை கடுமையாகத் தாக்கி படுகாயத்துக்குட்படுத்தியதாகவும் -

இராணுவத்தினர் தம்மை தாக்கிய சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## டோறா...

இந்தச் சண்டையில் கடற்படையின் ஒரு டோறா மூழ்கடிக்கப்பட்டது.

இதில் இருந்த 17 கடற்படையினர் உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த கடற்புலிகளின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## நாணய மாற்றுவீதம்

| நாணயங்கள் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச |
| அமெரிக்க டொலர் | 102.30 | 103.34 |
| ஸ்ரேளிங் பவுண் | 189.27 | 192.30 |
| யூரோ | 129.66 | 132.14 |
| சுவிஸ் பிராங் | 82.93 | 85.09 |
| அவுஸ்ரேலிய டொலர் | 79.21 | 80.22 |
| சிங்கப்பூர் டொலர் | 64.87 | 66.21 |
| ஜப்பான் யென் | .91 | .93 |

| அரபு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள் | ரூ. ச |
|---|---|
| பஹ்ரெய்ன் டினார் ஒன்றின் சுட்டிய விலை | 272.76 |
| குவைத் டினார் ஒன்றின் சுட்டிய விலை | 352.11 |
| ஓமான் றியால் ஒன்றின் சுட்டிய விலை | [illegible] |
| கட்டார் றியால் ஒன்றின் சுட்டிய விலை | |
| சவூதி றியால் ஒன்றின் சுட்டிய விலை | |
| ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹாம் ஒன்றின் சுட்டிய [illegible] | [illegible] |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.